**உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்துவின் வல்லமை ஊழியங்கள்**

# நீதிமான்



Compiled by
**P. Isaac Chandran**

நீதிமானுக்கு விளக்கம்:
தெய்வீக அல்லது தார்மீகச் சட்டப்படி நடந்து குற்ற உணர்வு மற்றும் பாவத்திலிருந்து விடுவிக்கப்பட்டவன்

வேதம் என்ன சொல்லுகிறது
எசேக்கியேல் 18:9 -ல் வாசிக்கிறோம்

என் கட்டளைகளின்படி நடந்து, என் நியாயங்களைக் கைக்கொண்டு, உண்மையாயிருப்பானாகில் அவனே நீதிமான்

நீதிமான்களுடைய சிரசின்மேல் ஆசீர்வாதங்கள் தங்கும்:
நீதிமொழிகள் 10:6

நீதிமானுக்கு ஒரு கேடும் வராது:
நீதிமொழிகள் 12:21

நீதிமான் தன் வழியை உறுதியாய்ப் பிடிப்பான். சுத்தமான கைகளுள்ளவன் மேன்மேலும், பலத்துப்போவான்.
யோபு 17:9

அவர் தம்முடைய கண்களை நீதிமான்களைவிட்டு விலக்காமல், அவர்களை ராஜாக்களோடே கூடச் சிங்காசனத்தில் ஏறவும், உயர்ந்த ஸ்தலத்தில் என்றைக்கும் உட்கார்ந்திருக்கவும் செய்கிறார்.
யோபு 36:7

கர்த்தர் நீதிமான்களின் வழியை அறிந்திருக்கிறார், துன்மார்க்கரின் வழியோ அழியும்.
சங்கீதம் 1:6

கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள்மேல் நோக்கமாயிருக்கிறது, அவருடைய செவிகள் அவர்கள் கூப்பிடுதலுக்குத் திறந்திருக்கிறது.
சங்கீதம் 34:15

துன்மார்க்கருடைய புயங்கள் முறியும், நீதிமான்களையோ கர்த்தர் தாங்குகிறார்.
சங்கீதம் 37:17

நான் இளைஞனாயிருந்தேன், முதிர்வயதுள்ளவனுமானேன், ஆனாலும் நீதிமான் கைவிடப்பட்டதையும், அவன் சந்ததி அப்பத்துக்கு இரந்து திரிகிறதையும் நான் காணவில்லை.
சங்கீதம் 37:25

நீதிமான்கள் பூமியைச் சுதந்தரித்துக்கொண்டு, என்றைக்கும் அதிலே வாசமாயிருப்பார்கள்.
சங்கீதம் 37:29

நீதிமான்களுடைய இரட்சிப்பு கர்த்தரால் வரும், இக்கட்டுக்காலத்தில் அவரே அவர்கள் அடைக்கலம்.
சங்கீதம் 37:39

நீதிமான் பனையைப்போல் செழித்து, லீபனோனிலுள்ள கேதுருவைப்போல் வளருவான்.
சங்கீதம் 92:12

நீதிமான்களுடைய கூடாரங்களில் இரட்சிப்பின் கெம்பீரசத்தம் உண்டு, கர்த்தரின் வலதுகரம் பராக்கிரமஞ்செய்யும்.
சங்கீதம் 118:15

அவர் நீதிமான்களுக்கென்று மெய்ஞ்ஞானத்தை வைத்துவைத்திருக்கிறார்;, உத்தமமாய் நடக்கிறவர்களுக்கு அவர் கேடகமாயிருக்கிறார்.
நீதிமொழிகள் 2:7

கர்த்தரின் நாமம் பலத்த துருகம்: நீதிமான் அதற்குள் ஓடிச்சுகமாயிருப்பான்.
நீதிமொழிகள் 18:10

நீதிமான் ஏழுதரம் விழுந்தாலும் திரும்பவும் எழுந்திருப்பான்:
நீதிமொழிகள் 24:16

அப்பொழுது, நீதிமான்கள் தங்கள் பிதாவின் ராஜ்யத்திலே சூரியனைப்போலப் பிரகாசிப்பார்கள்.
மத்தேயு 13:43

நீதிமான் தன் நீதியைவிட்டுத் திரும்பி, அநியாயஞ்செய்தால், அவன் அதினால் சாவான்.
எசேக்கியேல் 33:18

கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள்மேல் நோக்கமாயிருக்கிறது, அவருடைய செவிகள் அவர்கள் வேண்டுதலுக்குக் கவனமாயிருக்கிறது. தீமைசெய்கிறவர்களுக்கோ கர்த்தருடைய முகம் விரோதமாயிருக்கிறது.
1 பேதுரு 3:12

நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது.
யாக்கோபு 5:16

துன்மார்க்கனுடைய வீட்டில் கர்த்தரின் சாபம் இருக்கிறது, நீதிமான்களுடைய வாசஸ்தலத்தையோ அவர் ஆசீர்வதிக்கிறார்.
நீதிமொழிகள் 3:33

துன்மார்க்கன் பயப்படும் காரியம் அவனுக்கு வந்து நேரிடும்: நீதிமான் விரும்புகிற காரியம் அவனுக்கு கொடுக்கப்படும்.
நீதிமொழிகள் 10:24

நீதிமான் தன் உத்தமத்திலே நடக்கிறான்: அவனுக்குப்பிறகு அவன் பிள்ளைகளும் பாக்கியவான்களாயிருப்பார்கள்.
நீதிமொழிகள் 20:7

ஆம்! கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள்மேல் நோக்கமாயிருக்கிறது, அவருடைய செவிகள் அவர்கள் கூப்பிடுதலுக்குத் திறந்திருக்கிறது.

நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது. நீதிமான் விரும்புகிற காரியம் அவனுக்கு கொடுக்கப்படும். அவர்களை ராஜாக்களோடே கூடச் சிங்காசனத்தில் ஏறவும், உயர்ந்த ஸ்தலத்தில் என்றைக்கும் உட்கார்ந்திருக்கவும் செய்கிறார்.

***************